இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 21-02-2024

# இணையற்ற இரண்டு தீர்மானங்கள்

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இணையற்ற இரண்டு தீர்மானங்களைக் கொண்டு நிறைவேற்றி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**ஒன்று - இந்திய ஜனநாயகத்தைக் காக்க!**

**மற்றொன்று - தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்க!**

ஒரே நாடு - ஒரே தேர்தல் என்பதை உருவாக்குவதன் மூலமாக அரசியல் ஒற்றைத் தன்மையை உருவாக்க பா.ஜ.க. நினைக்கிறது. மாநிலங்களையும் உள்ளாட்சி அமைப்புகளையும் அடையாளமற்று செல்லாதது ஆக்கும் முயற்சியாகும். எனவே தான், 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' என்ற எதேச்சதிகார நடவடிக்கையை எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தொகுதி மறு சீரமைப்பை, மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மாற்றுவதன் மூலமாக - குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒழுங்காக கடைப்பிடிக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பின்னடைவைச் சந்தித்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் சரிவைச் சந்திக்க வேண்டி வரும். இதன் மூலமாக தமிழ்நாட்டின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் பேசுவோர் எண்ணிக்கை குறையும். எனவே தான் இதனையும் நாம் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவை இரண்டையும் அரசியல் எதிர்ப்பாக, அரசியல் கட்சிகளின் எதிர்ப்பாக மட்டும் இல்லாமல் தமிழ்நாடு சட்டமன்றத்தின் ஒட்டுமொத்தமாக ஆக்கிக் காட்டிவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

தொகுதிகளின் எண்ணிக்கை குறையும் என்பதற்கு எதிராகவும், ஒரே நாடு - ஒரே தேர்தல் என்பதற்கு எதிராகவும் திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையான எதிர்ப்பை ஏற்கனவே பதிவு செய்துள்ளது.

'ஒரே நாடு - ஒரே தேர்தல்' முறை குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழுவுக்கு தி.மு.க. சார்பிலான கருத்தை கழகப் பொதுச் செயலாளர் - மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் ஏற்கனவே அனுப்பி விட்டார்.

**"அரசியல் சட்டத்திற்கும் - அச்சட்டம் தந்த கூட்டாட்சி தத்துவத்திற்கும் எதிராக - மத்திய மாநில உறவை மட்டுமின்றி, ஒன்றியத்திற்கே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் "ஒரே நாடு - ஒரே தேர்தல்" திட்டத்தை கைவிடு! அதிகாரவரம்பற்ற விசாரணை நடத்தும் உயர்நிலைக்குழு - அதிகாரப் பசி கொண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு துணை போகாமல் - தனது விசாரணையை நிறுத்திக் கொள்ள வேண்டும்!"** - என்று அந்தக் கடிதத்தில் மாண்புமிகு துரைமுருகன் குறிப்பிட்டு இருந்தார்.

2022 இல் சட்ட ஆணையம் ஒரே நேரத்தில் பாராளுமன்றம், மற்றும் மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்துவது சம்பந்தமாகத் தான் ஆலோசனைகளைக் கோரியது. ஆனால், தற்பொழுது ஒன்றிய அரசு இதை விரிவுபடுத்தி பாராளுமன்ற மற்றும் மாநில சட்ட சபைகளோடு, நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளையும் இணைத்து ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் விதமாக ஆய்வு வரம்புகளை வெளியிட்டுள்ளது. இந்தச் செயல் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராகவும், குடியரசுத் தலைவர் முறையிலான ஆட்சியை நோக்கியும் செல்வதாகும். மாநில அரசின் உரிமைகளில் தலையிடுவதும் ஆகும். எனவே அனைத்து மாநில அரசுகளும் 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' என்பதை எதிர்க்க வேண்டும்.

'தொகுதிகளின் எண்ணிக்கை குறையக் கூடாது' என்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கனவே அறிக்கை விடுத்து இருந்தார். மகளிருக்கு 33 விழுக்காடு என்ற நாடகத்தை பா.ஜ.க. ஆட்சி செய்தது. சட்டத்தை நிறைவேற்றுவது போல நிறைவேற்றி, அது நடைமுறையில் நிறைவேறிவிடாத அளவுக்கு தடையையும் ஏற்படுத்தியது பா.ஜ.க. அரசு. தொகுதி வரையறை முடிந்த பிறகு தான் மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று 'கட்டை'யைப் போட்டுவிட்டது பா.ஜ.க. அரசு. தொகுதி மறுவரையறை என்பது இப்போதைக்கு நடக்கும் விஷயம் அல்ல என்பதை முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டி இருந்தார். அது தொடர்பான அறிக்கையில், தொகுதி மறுவரையின் மற்றொரு பக்கத்தை சுட்டிக் காட்டி இருந்தார் முதலமைச்சர் அவர்கள்.

**"தமிழ்நாட்டின் மீது - தென்னிந்தியாவின் மீது தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக தொகுதி மறுவரையறை (delimitation) உள்ளது. மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, தென்னிந்தியாவின் அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கிற அரசியல் சூழ்ச்சி முறியடிக்கப்பட வேண்டும். அரசியல் விழிப்புமிக்க தமிழ்நாட்டை வஞ்சிக்கிற அநீதியான முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட மாட்டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி, தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தைப் போக்கிட வேண்டும் எனப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்"** என்று கேட்டுக் கொண்டிருந்தார் முதலமைச்சர் அவர்கள். ஆனால் பா.ஜ.க. தலைமையோ, பா.ஜ.க. அரசோ இதற்கு அதிகாரப்பூர்வமான பதிலை இது வரை தரவில்லை.

தமிழ்நாட்டுக்கு, தொகுதிகளின் எண்ணிக்கை குறையாது என்ற உத்தரவாதம் இதுவரை கிடைக்கவில்லை. எனவேதான் தமிழ்நாடு அதிகமான கவலை கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**மாநிலங்களை ஒழிப்பதுதான் ஜனசங்கத்தின் வேலைத் திட்டமாக 1952 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதனைச் செய்வது தான் பா.ஜ.க. ஆட்சியின் வேலைகள் ஆகும். இதனை இறுதிவரை எதிர்த்தாக வேண்டும்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.2.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2024–2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கு முன்பாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அ.தி.மு.க. அரசின் பட்ஜெட் அறிவிப்புகள் புஸ்வாணமானதை மறந்துவிட்டு

# தி.மு.க. அரசின் பட்ஜெட்டை குறைகூறும் பழனிசாமிக்கு - நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணிக்கு மக்கள் வெற்றியைத் தந்து பதில் அளிப்பார்கள்!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலடி!

**சென்னை, பிப்.21-**

**"அ.தி.மு.க. அரசின் பட்ஜெட்களில் வெளியான அறிவிப்புகள் புஸ்வாணமானதை மறந்துவிட்ட எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு வெற்றியை அளித்து மக்கள் பதில் அளிப்பார்கள்" என விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் - நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட இயக்கக் கோட்பாடு களைக் கொண்ட, எல்லோருக்கும் எல்லாமுமான, கடைக்கோடி மனிதருக்கும் நல வாழ்வு அளிக்கும் பட்ஜெட்டை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அரசு தாக்கல் செய்திருக்கிறது. இதனால், கொதிநிலைக்குப் போயிருக்கும்எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமி, 'கனவு பட்ஜெட்; மக்களுக்குப் பயன் தராது' எனப் புலம்பியிருக்கிறார்.

'தி.மு.க. அரசுக்கு 8,33,361 கோடி கடன் உள்ளது. கடன் பெற்றே ஆட்சியை நடத்துகின்றனர். இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் நம்பர் ஒன் அரசாகத் தமிழ்நாடு அரசு உள்ளது' எனச் சொல்லியிருக்கிறார்.

**அ.தி.மு.க. ஆட்சியில்தான் கடன் சுமை அதிகம்!**

எம்.ஜி.ஆர். மாளிகையின் பரணில் தூக்கிப் போடப்பட்டிருக்கும் அ.தி.மு.க.வின் 2011 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையைத் தேடி எடுத்துப் படித்துப் பாருங்கள். அதையெல்லாம் படிக்க உங்களுக்கு நேரம் இருக்காது என்பது எங்களுக்குத் தெரியும். அதனால், 8ஆம் பக்கத்தை மட்டுமாவது கொஞ்சம் புரட்டிப் பாருங்கள். 'ஒரு லட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்கிற தலைக்குனிவில் இருந்து தமிழ்நாட்டை மீட்டு, தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கவும், தன்மானத்துடன் வாழவும், வழிவகை செய்யப்படும்' என வாக்குறுதி அளித்திருந்தீர்கள். அந்தத் தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க.தான் தொடர்ந்து 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. அம்மையார் ஜெயலலிதா, பன்னீர்செல்வம், பழனிசாமி ஆகியோரின் பத்தாண்டு ஆட்சிகளில் கடன் சுமை என்கிற தலைக்குனிவைப் போக்குவதற்குப் பதிலாக ஒவ்வொரு தமிழரின் தலையிலும் கடனை ஏற்றியதுதான் உங்கள் சாதனை.

நடப்பது மக்களாட்சியா... இல்லை மன்னராட்சியா எனச் சந்தேகம் கொள்ளும் வகையில் சட்டமன்றத்தில் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் துதிபாடிக் கொண்டிருந்தார்கள். எதார்த்தத்துக்கு வராமல் ஜெயலலிதா அவர்களையும் பழனிசாமி அவர்களையும் குளிர்விப்பதற்கே தமிழ்நாடு சட்டமன்றம் பயன்பட்டது. 2011 -2012ஆம் ஆண்டில் 1 லட்சத்து 30 ஆயிரத்து 630 கோடி ரூபாயாக இருந்த கடனைப் படிப்படியாக உயர்த்தி 2020 - 2021ஆம் ஆண்டில் 4 லட்சத்து 85 ஆயிரத்து 502 கோடி ரூபாயாகக் கொண்டு வந்து நிறுத்தினீர்கள்.

'கடன்' என்ற சொல்லுக்குக் 'கடமை' என்ற பொருளும் உண்டு. ஆனால், கடமையைச் செய்யத் தவறிக் கடன் சுமை தொடர்ந்து ஏறிக்கொண்டே போனது தான் பத்தாண்டு அ.தி.மு.க. அரசின் சாதனை. 'ஒரு மாநில அரசு, மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் ஆண்டுக்கு மூன்று விழுக்காட்டுக்கு மேல் கடன் வாங்க முடியாது. அதே சமயம் எந்தக் காலத்திலும் ஒட்டுமொத்தமாக 25 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது' என்கிறது மத்திய நிதி கமிஷன். இந்த வரம்பைத் தமிழ்நாடு அரசு இன்னும் தாண்டவில்லை.

ஓர் அரசு கடன் வாங்குவதில் தவறு இல்லை. உலகம் எங்கும் அரசுகள் கடன் வாங்கித்தான் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால் அப்படிப் பெறப்படும் கடனைத் திருப்பிச் செலுத்தக் கூடிய திறன் பெற்ற அரசாக இருக்க வேண்டும். அப்படியான அரசாக தி.மு.க. அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 'வருஷா வருஷம் கடன் வாங்கித்தான் இந்த அரசு வண்டியை ஓட்டிக்கிட்டு இருக்கு' என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள். பத்தாண்டு அ.தி.மு.க. அரசும் அதைத்தானே செய்து கொண்டிருந்தது. தி.மு.க. அரசின் கடனைப் பற்றிக் கவலைப்படும் பழனிசாமி ஏன் மோடி அரசின் கடனைப் பற்றி வாய் திறக்கவில்லை?

**ஒன்றிய அரசின் கடன் பற்றி பழனிசாமி பேசலாமே!**

2014-இல் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் ஆட்சியில் 54 லட்சம் கோடியாக இருந்த கடன் பத்தாண்டில் 205 லட்சம் கோடிக்கு மேல் உயர்ந்திருக்கிறதே அதைப் பேசப் பழனிசாமி அவர்களின் வாய்க்கு யார் பூட்டு போட்டார்கள்?

பா.ஜ.க.வோடு கூட்டணி இல்லை என்பதை மணிக்கொரு முறை சொல்லிக் கொண்டிருக்கும் பழனிசாமி அவர்கள், அது உண்மையென்றால் ஒன்றிய அரசின் கடனைப் பற்றி கர்ஜிக்க வேண்டியது தானே?

பழனிசாமி அவர்கள் அளித்த அந்தப் பேட்டியில் அவரே ஒரு உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். "அ.தி.மு.க. ஆட்சியை விட அதிக வருவாய் இப்போது தி.மு.க. ஆட்சியில் வருகிறது" எனச் சொல்லியிருக்கிறார். அதாவது வருவாயைப் பெருக்கும் பணியைத் தி.மு.க. அரசு செவ்வனே செய்து வருகிறது என அவரே சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார். கடனை அடைக்க வருவாயைப் பெருக்கும் வழியையும் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு செய்து கொண்டிருக்கிறது. நிச்சயமாகக் கடனை அடைக்கும் வழிகளை இன்னும் சிறப்பாக இந்த அரசு மேற்கொள்ளும்.

'தி.மு.க. அரசின் பட்ஜெட் கானல் நீர் போன்றது; மக்களுக்குப் பயன் தராது' எனச் சொல்லியிருக்கிறார். அது பயன் தரும் என நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பு எழுதுவார்கள். கடந்த காலங்களில் அ.தி.மு.க.வின் பட்ஜெட்டுகளில் வெளியான அறிவிப்புகள் புஸ்வாணமானதை எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மறந்துவிட வேண்டாம்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

